**OS No.61/2019**
DW 2 – ராமுஅண்ணாமலைசாமி

நாள் 24.11.2025

**பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பி.வா.சா. 18 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

தாவா வழக்கில் எத்தனையாவது இலக்க சொத்தை கிரயம் பெற்றுள்ளீர்கள் என்றால் 4 வது இலக்க சொத்தை கிரயம் பெற்றுள்ளேன். தாவா சொத்தை பாண்டி என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றேன்.

கிரயம் வாங்கும் போது அந்த சொத்து யாருடைய பெயரில் பட்டா இருந்தது என்று பார்த்துள்ளீர்களா என்றால் பாண்டி பெயரில் தான் இருந்தது. நீங்கள் கிரயம் பெற்ற தாவா சொத்து தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவாக உள்ளது. அந்த சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்றால் தற்போது என் அனுபவத்தில் உள்ளது.

அதில் தென்னை, உளுந்து பயிர் செய்துள்ளேன். தாவா வழக்கு சொத்தில் உங்களுக்கு எந்த அனுபவமும் பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>31 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் உள்ள 31 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பற்றி தெரிந்து கெண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். நான் கிரயம் வாங்கிய சொத்திற்கு பக்கத்தில் 31 ம் பிரதிவாதி டவர் அமைத்துள்ள நிலம் உள்ளது.

இந்த வழக்கில் உள்ள 18 முதல் 22 வரை உள்ள பிரதிவாதிகளிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டு டவர் அமைக்கப்பட்டது என்றால் டவர் அமைக்கப்பட்டுள்ளது ஒப்பந்தம் ஏற்பட்ட விபரம் எனக்குத் தெரியாது. டவர் அமைந்துள்ள இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால்

தெரியாது.

டவர் அமைக்கப்பட்டிப்பதற்கான மாத வாடகையை யார் வாங்கிவருகிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. டவர் அமைந்துள்ள 5 வது இலக்க சொத்து சம்பந்தமாக எனக்கு எந்தஒரு உரிமையும் கிடையாது என்றால் சரிதான். வாதி தரப்பில் கேட்டுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரிதான்.

**( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது )**

**-Sd-**

**Taken down by me in open court**
**readover/interpreted to the witness in Tamil and**
**acknowledged by him/her to be correct.**

**-Sd-**
**District Munsif,**
**Manamadurai.**